சுருக்கம்

பள்ளிக் கல்வி –தனியார் சுயநிதி பள்ளிகள் குறைந்தபட்ச இடவசதி ஒரே அமைவிடத்தில் ஏற்படுத்தாத பள்ளிகள் சார்பாக – இடவசதி சார்ந்த விதியை மாற்றியமைப்பது தொடர்பாக – வல்லுநர் குழு அமைத்தல் – ஆணைவெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி(எக்ஸ்.2)த் துறை

அரசாணை (1டி) எண்.54

நாள் 05.03.2013.
திருவள்ளுவர் ஆண்டு 2044
நந்தன வருடம், மாசி 21

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை நிலை (2டி) எண்.48 , பள்ளிக்கல்வித் துறை நாள். 21.07.2004
2. அரசாணை நிலை (2டி) எண்.24, பள்ளிக் கல்வித் துறை நாள். 23.04.2010
3. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கடித எண்.1004/அ1/ 2010, நாள் 23.3.2012

*********

ஆணை:–

2012–2013 ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு அமைச்சர் (பள்ளிக் கல்வித் துறை) அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

"தமிழகத்தில் செயல்படும் தனியார் பள்ளிகளைத் தொடங்க மற்றும் அங்கீகாரம் வழங்கத் தேவையான குறைந்தபட்ச நிலம் வரையறுக்கப்பட்டுள்ளது. தற்போது செயல்படும் பல பள்ளிகள் இந்த நிபந்தனையைப் பூர்த்தி செய்யாததால் அங்கீகாரம் வழங்க இயலாத நிலை உள்ளது. தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைக்கான விதிகள், 2011 நடைமுறைப்படுத்தப்படுவதால் அங்கீகாரம் இல்லாமல் பள்ளிகள் செயல்பட இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, குறைந்தபட்ச நிலத்தினைத் தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் வாரியாகவும், மாணவர் எண்ணிக்கை மற்றும் வகுப்புகளின் எண்ணிக்கைக்கு ஏற்பவும் நிர்ணயம் செய்ய வல்லுநர் குழு அமைக்கப்படும்"

2. மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மெட்ரிகுலேசன் மற்றும் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகட்கு அங்கீகாரம் வழங்குவதற்குத் தேவையான குறைந்தபட்ச நிலப்பரப்பு உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவை வரையறுக்கப்பட்டும் பள்ளிகளுக்கான குறைந்தபட்ச நிலப்பரப்பினைப் பொறுத்தவரை பள்ளிகள் அமைந்துள்ள பகுதிகளின் தன்மைக்கேற்ப பரப்பளவு கீழ்க்குறித்தவாறு நிர்ணயம் செய்தும் ஆணை வெளியிடப்பட்டது.

| | | |
|---|---|---|
| மாநகராட்சி பகுதி | : | 6 மனையிடம் (grounds) |
| மாவட்டத் தலைநகரம் | : | 8 மனையிடம் (grounds) |
| நகராட்சி | : | 10 மனையிடம் (grounds) |
| பேரூராட்சி | : | 1 ஏக்கர் (acre) |
| ஊராட்சிப் பகுதி | : | 3 ஏக்கர் (acres) |

3. மேற்குறித்தவாறு நிலப்பரப்பிற்கான குறைந்தபட்ச தேவையைப் பூர்த்தி செய்யாத பள்ளி நிர்வாகங்களுக்கு நிலத்திற்கான விலை மிக உயர்ந்துள்ளதைக் கருத்தில் கொண்டு மேற்படி நிபந்தனையை நிறைவேற்ற மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் கால அவகாசமும் மேற்காணும் அரசாணையில் அளிக்கப்பட்டும் அவ்வாறு வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவுற்ற நிலையிலும் குறைந்தபட்ச நிலப்பரப்பு தேவையை பூர்த்தி செய்யாத பள்ளிகளில் பயிலும் மாணாக்கரின் கல்வி நலன் மற்றும் பள்ளி நிர்வாகங்களால் தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்களை கருத்தில் கொண்டு மேலும் மூன்றாண்டுகளுக்கு கால அவகாசம் அளித்து அரசாணை (நிலை) எண்.238, பள்ளிக் கல்வித் துறை, நாள் 26.11.2008–ல் ஆணை வெளியிடப்பட்டது. மேற்காண் அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகளை அரசு மற்றும் அனைத்துவகை தனியார் பள்ளிகளுக்கும் நிர்ணயித்து அரசாணை (நிலை) எண்.49, பள்ளிக்கல்வித் துறை நாள். 01.03.2007–இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

4. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், குறைந்தபட்ச நிலம் ஒரே இடத்தில் அமையவேண்டுமென ஏதும் குறிப்பிடப்படவில்லை. எனவே, ஒரே அமைவிடத்தில் அமையாத பள்ளிகளுக்கு தொடக்க அனுமதி வழங்க நிராகரிப்பு செய்யும்போது நீதிமன்ற வழக்குகள் போன்ற பல்வேறு நிர்வாகப் பிரச்சனைகள் ஏற்படுவதால் அரசாணையின்படி கருத்துருக்களை பரிசீலித்து ஆணை வழங்க இயலாத நிலை உள்ளதாலும் இந்நிலையினை தவிர்க்கவும், மாணவர்கள் கல்வி நலன் மற்றும் பாதுகாப்பு ஆகிய அம்சங்களை உறுதிசெய்யவும், பள்ளிக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச நிலம் ஒரே இடத்தில் அமைந்தால் மட்டுமே சாத்தியமாகும் என்பதால் அரசாணை (2டி) எண். 48 நாள். 21.7.2004–ல் "Land Area" என்ற தலைப்பில் உள்ள பகுதிக்கு கீழ்க்கண்டவாறு திருத்தங்கள் செய்து, இத்திருத்தம் மேற்படி அரசாணை வெளியிட்ட நாள். 21.7.2004 முதல் முன் தேதியிட்டு அரசாணை (நிலை) எண்.24 பள்ளிக் கல்வி துறை நாள்.23.04.2010–ல் ஆணை வெளியிடப்பட்டது.

**Amendment to G.O. (2D) No. 48 School Education Department Dated. 21.07.2004 regarding Land Area.**

| அரசாணை (2டி) 48–ல் உள்ளது | | திருத்தப்பட்டது | |
|---|---|---|---|
| LAND AREA | | LAND AREA | |
| Corporation | 6 Grounds | Corporation | 6 grounds composite land. |
| District Head quarters | 8 Grounds | District Head quarters | 8 grounds composite land. |
| Municipality | 10 Grounds | Municipality | 10 grounds composite land. |
| Township | 1 acre | Township | 1 acre composite land |
| Rural | 3 acres | Rural | 3 acres composite land. |

5. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கடிதத்தில் குறைந்தபட்ச இடவசதி ஒரே அமைவிடத்தில் ஏற்படுத்தாமல் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரகக் கட்டுப்பாட்டின் கீழ் சுமார் 858 பள்ளிகள் செயல்படுவதாகவும் இப்பள்ளிகள் மேற்கண்ட அரசாணை வெளியிடப்படுவதற்கு முன்னரே பல ஆண்டுகளாகச் செயல்படும் பள்ளிகளாகும் என்றும், இந்நிலையில் இவ்வாறான பள்ளிகளுக்குக் குறைந்தபட்ச இடவசதி ஒரே அமைவிடத்தில் ஏற்படுத்தாத காரணத்தால் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது எனத் தெரிவித்துக் காரணம் காட்டும் அறிவிக்கை சார்பு செய்யப்பட்டது என்று தெரிவித்துள்ளார். மேலும், தற்போதைய நிலையில் இப்பள்ளிகள் அமைவிடத்திற்கு அருகில் கூடுதல் இடவசதி ஏதும் பெற இயலாத நிலை உள்ளதாகவும் மேலும் நிலத்தின் விலையும் பன்மடங்கு அதிகரித்து கூடுதல் நிலம் வாங்குவதற்கு இயலாத நிலை உள்ளதாகவும் பல பள்ளி நிர்வாகங்களிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டுள்ளது என்றும் இதே நிலை பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக்கல்வி இயக்ககக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் பள்ளிகளிலும் உள்ளதாகத் தெரிவித்துள்ளார். இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 பிரிவு 18 உட்பிரிவு (1)ல் எந்த ஒரு பள்ளியும் அங்கீகாரம் பெறாமல் செயல்படக் கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனால் பல பள்ளிகள் அங்கீகாரம் பெற இயலாத நிலை ஏற்பட்டு மாணவர்கள் கல்வி நலன் பெரிதும் பாதிக்கும் சூழ்நிலை உருவாகும். மேற்காண் அரசாணைகளுக்கு முன்பே துவக்க அனுமதி மற்றும் நிரந்தர அங்கீகாரம் பெற்றுள்ள சில பள்ளிகளும் இரு வேறு அமைவிடங்களில் செயல்படும் பள்ளிகளாக உள்ளன. மேலும், சில பள்ளிகளில் குறைந்தபட்ச இடவசதி ஒரே அமைவிடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள போதிலும், மாணவர் சேர்க்கை மிக அதிகமாக உள்ளதால் அப்பள்ளிகளில் குறிப்பிட்ட சில வகுப்புகள் ஒரே அமைவிடத்திலும் இதர வகுப்புகள் அருகில் உள்ள அமைவிடத்திலும் செயல்பட்டு வரும் நிலை உள்ளது என தெரிவித்துள்ளார்.

6. மேலே படிக்கப்பட்ட அரசாணைகளின்படி பள்ளி அமைந்துள்ள பகுதியான(Location) (மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, மாவட்ட தலைமையிடம் மற்றும் கிராம ஊராட்சி ஆகியன) அடிப்படையிலேயே குறைந்தபட்ச இடவசதி நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் அப்பள்ளிகள் துவக்க பள்ளிகளா, நடுநிலைப் பள்ளிகளா, உயர் / மேல்நிலைப் பள்ளிகளா என வகைப்படுத்தி குறைந்தபட்ச இடவசதி நிர்ணயம் செய்யப்படவில்லை என்றும், அப்பள்ளிகளில் பயிலும் மாணவர் எண்ணிக்கைக்கேற்ப குறைந்தபட்ச இடவசதி நிர்ணயம் செய்யப்படலாம் எனவும் பள்ளி நிர்வாகங்களிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டுள்ளது என மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

7. இந்நிலையில் குறைந்தபட்ச இடவசதி ஒரே அமைவிடத்தில் ஏற்படுத்தாத பள்ளிகள் சார்பாகவும் தனியார் பள்ளிகள் தொடங்க அனுமதி மற்றும் அங்கீகாரம் அமுல்படுத்துவதற்கான குறைந்தபட்ச இடவசதியினை நிர்ணயம் செய்வது குறித்து முடிவெடுக்க உறுப்பினர்களை கொண்டு குழு ஒன்றினை அமைத்திடலாம் என்று மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

8. மேற்காணும் மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து மாண்புமிகு பள்ளிக் கல்வித் அமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் பள்ளிக் கல்வித் துறை மானிய கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட "தனியார் பள்ளிகள் தொடங்க அனுமதி மற்றும் அங்கீகாரம் வழங்குவதற்கான குறைந்தபட்ச இடவசதியினை நிர்ணயிக்க வல்லுநர் குழு அமைத்தல்" தொடர்பான அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு கீழ்க்காணும் உறுப்பினர்களை கொண்டு வல்லுநர் குழு அமைத்து அரசு ஆணையிடுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | பள்ளிக் கல்வி இயக்குநர் | – | தலைவர் |
| (2) | உறுப்பினர்–செயலர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமம் அல்லது அவர்களால் முன்மொழியப்படும் அலுவலர். | – | உறுப்பினர் |
| (3) | ஆணையர் / இயக்குநர், நகர் மற்றும் ஊரமைப்புத்துறை இயக்ககம் அல்லது அவர்களால் முன்மொழியப்படும் அலுவலர். | – | உறுப்பினர் |
| (4) | தலைமைப் பொறியாளர், பொதுப்பணித் துறை. | – | உறுப்பினர் |
| (5) | ஊரகவளர்ச்சித் துறை பிரதிநிதி (ஆணையர், ஊரகவளர்ச்சித் துறை அல்லது அவர்களால் முன்மொழியப்படும் அலுவலர்) | – | உறுப்பினர் |
| (6) | தொடக்கக்கல்வி இயக்குநர் | – | உறுப்பினர் |
| (7) | மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் | – | உறுப்பினர்– செயலாளர் |

மேற்காணும் பொருள் குறித்து ஆராய்ந்து தனது அறிக்கையினை மூன்று மாத காலத்திற்குள் அரசுக்கு அளிக்குமாறு குழுவின் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
உறுப்பினர்– செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமம், சென்னை –8
ஆணையர்,
நகர் மற்றும் ஊரமைப்புத்துறை இயக்ககம், சென்னை –2
தலைமைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, சென்னை–5
ஆணையர், ஊரகவளர்ச்சித் துறை, சென்னை –15
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6
தொடக்கக்கல்வி இயக்குநர் சென்னை–6
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6

<u>நகல்</u>
பள்ளிக் கல்வி அமைச்சரின் நேர்முக உதவியாளர் சென்னை–9
பொதுப்பணித்துறை செயலாளரின் தனிச்செயலர், சென்னை–9
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளரின் தனிச்செயலர், சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச்செயலாளரின்
தனிச்செயலர்,சென்னை–9
இருப்பு கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

6-3-13
பிரிவு அலுவலர்.
5-3-13